<u>மன்னார்குடி நகராட்சி</u>

# <u>சாதாரணக்கூட்டம்</u>

**நிகழும் விளம்பி வருடம் சித்திரை மாதம் – 17ம் தேதி (2018 ம் வருடம் ஏப்ரல் 30 ந் தேதி) திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலக வளாகத்தில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அது சமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.**

<u>பொருள்கள்</u>

| | | |
|---|---|---|
| பொருள் எண்.1 | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் மார்ச் – 2018 மாதத்திற்கான நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்.475பதிவு செய்யப் பட்டது. |
| பொருள் எண்.2 | மன்னார்குடி நகரம் வார்டு –1, பகுதி 61 நகரளவை எண்.4074/2ஏ2, 4074/1, 4076/1 பகுதி, 4077 பகுதியில், 0.46 சென்ட் (20154 ச.அடி) பரப்பளவு உள்ள இடத்தில் மனைப்பிரிவு அனுமதி கோரி திரு கோபாலன் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1101/2017/த.ம.2 நாள்.29.01.2018ன் கடிதம் மற்றும் சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக நகராட்சி ஆணையர், மன்னார்குடி அவர்களின் 06.04.2018ம் தேதிய கடிதம் ந.க.எண்.341/2018/எப்1 ன்படி மனைப்பிரிவு சாலைகளை தார்சாலையாக அமைத்து, தெரு மின்விளக்கு வசதி, குடிநீர் விநியோக குழாய் மற்றும் வடிகால் அமைத்து மனைப்பிரிவு நிபந்தனையின்படி சாலைகளுக்கான இடத்தை நகராட்சிக்கு தானபத்திரமாக பத்திர பதிவு செய்து (தானபத்திர எண்.6170/2018) விண்ணப்பித்துள்ளார். சாலைகள், மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி அமைத்துள்ளதால், நகராட்சி எடுத்து கொள்ள பொறியியல் பிரிவில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தானபத்திரத்தை ஏற்று, நகர ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று, இறுதி ஒப்புதல் வழங்குவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்.476அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| பொருள் எண்.3 | இந்நகராட்சி 2018 – 2019 ஆம் ஆண்டிற்கு நகராட்சி பணிகள் சம்மந்தமாக நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர், நகராட்சி பணியாளர்கள் வெளியூர் சென்று வருவதற்கான பயணப் பட்டியல் தொகை வழங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2,00,000 /– ( ரூபாய் இரண்டு இலட்சம் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்.477 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்.4 | இந்நகராட்சிக்கு 2018 – 2019 ஆம் ஆண்டிற்கு தேவையான பணமதிப்புள்ள சொத்துவரி , குடிநீர் வரி , தொழில்வரி மற்றும் இதர வரி ரசீதுகள் அளவு புத்தகம் A4 பேப்பர் மற்றும் FX பேப்பர் வாங்கிக் கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.3,00,000 /– ( ரூபாய் மூன்று இலட்சம் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அரசு நிறுவனம் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் அச்சடித்துக் கொள்ளவும், பொருட்களை வாங்கிக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1155/2014/அ3) | தீர்மான எண்.478 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| பொருள் எண்.5 | இந்நகராட்சி 2018 – 2019 ஆம் ஆண்டிற்கு தேவையான கணினி உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்கி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.5,00,000 /– ( ரூபாய் ஐந்து இலட்சம் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.479அலுவல க குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| பொருள் எண்.6 | தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது பற்றி அறிவிக்கை.<br>…….<br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 82ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்துவரியானது விதிக்கப்படுகிறது. மேலும் வரிவிதிப்பு விதி 6-A ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய கீழ்கண்டவாறு வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.<br><br>தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் ( இரண்டாம் திருத்தம்) சட்டம்–2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6 ) –ன் | தீர்மான எண்.480அலுவல க குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், **1920**, பிரிவு **83 (1) (சி)** க்கு கீழ்கண்டவாறு சட்டத் திருத்த வெளியிடப்பட்டுள்ளது.

AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT,1920

5. In Section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920, in sub-section (1),
(1) for clause (c ), the following clause shall be substituted, namely:-
" (c ) building used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, home and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing course shall be subject to levy of property tax,"

(2) in the proviso, for the Expression " clauses (a), (c) and (e)", the expression "clauses (a) and (e) " shall be substituted

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடஙகளை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடஙகள் உட்பட ஏனைய கட்டிடஙகள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனஙகள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடஙகள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், **1920**, பிரிவு **83(1) (சி)** ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடஙகளுக்கு, சொத்துவரியிலிருந்து விலக்களிக்கவும்

- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், **1920**, பிரிவு **83(1) (சி)** ற்கு வெளியிடப்பபடட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடஙகளை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடஙகள் உட்பட ஏனைய கட்டிடஙகள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கப்படும்.

- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், **1920**, பிரிவு **83(1)**ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனஙகள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் பட்சத்தில் அந்நிறுவனஙகளின் கட்டிடஙகளுக்கு சொத்துவரி விதிக்கவும்.

- கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடஙகள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி

| | | |
|---|---|---|
| | பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடஙகு சொத்துவரியாக விதிக்கவும்.<br>❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 83 (1), (சி) ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரையாண்டிலிருந்து மேற்படி கட்டிடஙகளுக்கு சொத்துவரி விதிக்கவும்.<br>❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 78(3) ன்படி ஆட்சேபனைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழிலில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அறிவிப்பு பலகைகளில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது.<br>இதன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78(3) ன்படி மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விபரம் அறிவிப்பு செய்வதற்கும் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர் சொத்துவரி விதிப்பினை மேற்கொள்வது குறித்தும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அதற்குரிய செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1629/2018/அ1) | |
| பொருள் எண்.7 | இந்நகராட்சியின் 2018–2019 க்கான அலுவலக உபயோகத்திற்கு பண மதிப்பில்லா படிவங்கள், பதிவேடுகள், அலுவலக கவர்கள், பைல் பேடு, ரேப்பர் ஷீட் மற்றும் இதர பொருட்கள் வாங்கிக் கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.4,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணமதிப்பில்லா படிவஙகள் மற்றும் இதர ஸ்டேஷனரி பொருட்கள் தேவைக்கேற்ப அரசு அனுமதி பெற்ற நிறுவனஙகளிடமிருந்து வாஙகிக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1635/2018/டி2 | தீர்மான எண்.481 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| பொருள் எண்.8 | இந்நகராட்சிக்கு சொந்தமான வார சந்தைப்பேட்டை பேருந்து நிலையம் அருகில் இயங்கி வரும் அம்மா உணவகம் கடந்த 24.05.2015 முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே மேற்படி அம்மா உணவகத்தை செயல்படுத்த 2018–2019 ஆம் ஆண்டிற்கு தேவையான உணவு பொருட்கள் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.30.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்.482 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு: மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1832/2015/அ1) | |
| பொருள் எண்.9 | நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 33 வார்டுகளில் வாக்காளர்கள் 58598 வாக்காளர்களினை சிறப்பு சுருக்க திருத்த பணியினை கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு தற்காலிக தட்டச்சர் பணியாளர்களை கொண்டு பதிவேற்றம் செய்ய ரூ.50,000/– ற்கும் மன்றம் பெறப்பட்டது. Re duplication பணிகளும் மேற்கொள்ளப்பட்டதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.30,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. நகர்மன்ற தீர்மானம் எண்.403 நாள்.28.02.2018 ரூ.50,000/ற்கு செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.<br>2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சுற்றறிக்கை மற்றும் ஆய்வுக் கூட்டங்களில் அறிவுறுத்தியதின்படி வாக்காளர் பதிவேற்றம் தொடர்பாக கூடுதல் பணி மேற்கொள்ளப்பட்டதால், மேற்படி கூடுதல் செலவினத்தை மன்றம் ஏற்கலாம்.<br><br>(ந.க.எண்.689/2016/பி4) | தீர்மான எண்.483அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| பொருள் எண்.10 | இந்நகராட்சிக்குட்பட்ட வடசேரி சாலையில் உள்ள மின்தகன மேடையில் (Gasifier Crematorium) சடலம் வைக்கப்படும் மேடை, கதவு Control Panel, Trolley and Vertury Scrubber ஆகியவை பழுதடைந்தும் உடைந்தும் இயக்கமுடியாத நிலையில் உள்ளதால், அவற்றை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், சடலம் எரியூட்ட Gas Firing System (LPG) பொருத்தவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மேற்காணும் செலவீனத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.484அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td>பொருள் எண்.11</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 அரசு மருத்துவமனை சாலையில் நகராட்சி அலுவலக சந்திப்பில் தார் சாலை அமைக்கும் பணிக்கு 11.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு,
<table>
<tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>RGK Infrastructure,<br>ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.03 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>ஆர்த்தி & கோ<br>ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.18 % அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.</td>
<td>தீர்மான எண்.485அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.12</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 அரசு மருத்துவமனை சாலை பிரதான சாலையை பராமரிப்பு செய்திடவும், சாலையின் ஓரங்களில் Edge Marking செய்திடு ம் பணிக்கு 11.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு,
<table>
<tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>RGK Infrastructure,<br>ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.04 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>ஆர்த்தி & கோ<br>ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.42 % அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.</td>
<td>தீர்மான எண்.486 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்.13 | இந்நகராட்சியில் 2017–18ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியின் சாதனைகளை கீழ்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் செலுத்தக்கோரி கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br><br>வ. எண். / விபரம் / பட்டியல் எண் / நாள். / தொகை ரூ.<br>1. / தினமலர் / TRY20950 / 29.03.2018 / 25,200<br><br>மேற்கண்ட கட்டண தொகை ரூ.25,200/–ஐ செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மேற்காணும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்.487 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| பொருள் எண்.14 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 காமராஜ் காலனியில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.65 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மேற்காணும் செலவீனத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்.488 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| பொருள் எண்.15 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனம் மூலம் குப்பை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளுக்கு தேவையான துப்புரவு உபகரணங்கள் வாங்கி பயன்படுத்திட இந்நகர்மன்ற தீர்மானம் எண். 472. நாள் 28.03.2017 ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.<br>மேற்படி பணிக்கு 17.04.2017 ல் உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>வ.எண். / நிறுவனம் பெயர் / விலைப்புள்ளி தொகை ரூ.<br>1. / தி கரண் சோஷியல் சர்வீஸ் செண்டர், மன்னார்குடி / 1,95,775 /–<br>2. / ஸ்ரீமாதா சோஷியல் டெவலப்மெண்ட் பவுண்டேஷன், மன்னார்குடி / 2,03,225 /– | தீர்மான எண்.489அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு: 1. மேலே வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண்.1 ல் கண்ட தி கரண் சோஷியல் சர்வீஸ் செண்டர், மன்னார்குடி நிறுவனத்தின் மிக குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2. இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழஙகியதனையும், செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 1836/2018/எச்1) | |
| பொருள் எண்.16 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2018 – 2019 ம் நிதியாண்டிற்கு நீர்த்த சுண்ணாம்பு தனியார் நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 20 டன் வாங்கி பயன்படுத்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2342/2017/எச்1) | தீர்மான எண்.490 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| பொருள் எண்.17 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடுவதை கூடத்திற்கு உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு சட்டம் 2006 மற்றும் உப விதிகளின்படி உரிமம் தொகை செலுத்திய காலம் 07.12.2017 உடன் காலாவதியாகிவிட்டதால் 2018ம் ஆண்டு முதல் ஆண்டிற்கு ரூ.2,000/– என ஐந்து வருடத்திற்கு ரூ.10,000/– அரசு கருவூலத்தில் உரிய தலைப்பில் செலுத்திட, செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2024/2016/எச்1) | தீர்மான எண்.491 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.18 | இந்நகராட்சியில் 33 வார்டுகளில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 66997 மக்கள் தொகையும் 20000 குடியிருப்புகளும் உள்ளன. நகர் பகுதி விரிவடைந்து வளர்ந்து வரும் நகரமாக உள்ளது. இந்நிலையில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களில் 140 தற்சமயம் 83 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகும் துறை அரசாணை எண். 101 நாள் 30.4.1997 ன்படி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 7137/பி3/2018 நாள் 07.04.2018 ன்படி 114 துப்புரவு பணியாளர்களை (Outsourcing) வெளி நிறுவனம் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் அமர்த்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே நகர் பகுதியில் அனைத்து வார்டுகளிலும் சுகாதார பணிகள் முழுமையாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக குப்பைகளை அகற்றி அதனை வாகனத்தில் சேகரித்து உரக்கிடங்கில் கொண்டு செல்வதற்கு ஏதுவாக வாகனங்கள் இயக்கிட தேவையான ஓட்டுநர்களை நியமித்திட அனுமதிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி பெற்று அமர்த்திக் கொள்ளவும் அதற்கு ஆகும் மாதம் ஒன்றிற்கு உத்தேச செலவினம் (375 x 31 x 8 நபர்கள்) = ரூ.93,000/– மதிப்பீட்டில் ஒப்பந்த அடிப்பபடையில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை நியமனம் செய்து பணிகள் மேற்கொள்ள மாதம் ஒன்றிற்கு ஆகும் செலவினம் ரூ.93,000/– ஐ நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.8118/2017/எச்1) | தீர்மான எண்.492அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| பொருள் எண்.19 | இந்நகராட்சியில் 33 வார்டுகளில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 66997 மக்கள் தொகையும் 20000 குடியிருப்புகளும் உள்ளன. நகர் பகுதி விரிவடைந்து வளர்ந்து வரும் நகரமாக உள்ளது. இந்நிலையில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களில் 140 தற்சமயம் 83 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகும் துறை அரசாணை எண். 101 நாள் 30.4.1997 ன்படி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 7137/பி3/2018 நாள் 07.04.2018 ன்படி 114 துப்புரவு பணியாளர்களை (Outsourcing) வெளி நிறுவனம் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் அமர்த்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே நகர் பகுதியில் அனைத்து வார்டுகளிலும் சுகாதார பணிகள் முழுமையாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி பெற்று அமர்த்திக் கொள்ளவும், மாதம் ஒன்றிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்த பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் | தீர்மான எண்.493 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் அனுமதித்துள்ள செயல்முறைகளின்படி ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.13.00 இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.8118/2017/எச்1)** | |
| பொருள் எண்.20 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 50 X 6545 மற்றும் TN 50 X 6541 டிராக்டர் மற்றும் டிராக்டர் டிப்பர் வாகனத்திற்கு **06.03.2018** உடன் தகுதிச்சான்று உரிமம் முடிவடைந்துள்ளதால் மேலும் ஓராண்டிற்கு தகுதிச்சான்று பெற்றிட ஏதுவாக வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,800 க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.1616/2018/எச்1)** | தீர்மான எண்.494 அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| பொருள் எண்.21 | மன்னார்குடி நகராட்சி அலுவலகத்திற்கு மேற்கு புறத்தில் உள்ள செங்குளத்தின் மேற்கரையில் அமைந்துள்ள கார் மற்றும் வேன் நிறுத்துமிடத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு கார் மற்றும் வேன் ஓட்டுநர் சங்கத்தினால் நகராட்சி அலுவலகத்தினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.20830/2013ன் வாயிலாக வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகிய வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/—ஐ திரு பி. சீனிவாஸ் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.5580/2009/அ4)** | தீர்மான எண்.495அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

**(ஒம்) திரு கோ. இளங்கோவன், டி.சி.இ.,**
**தனி அலுவலர்**

மன்னார்குடி நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையர் (பொ)
மன்னார்குடி நகராட்சி